**சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையமானது கனேடிய உயர் ஸ்தானிகராலயததின் அனுசரணையுடன், முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நிதியத்தின் (MWDT) ஒருங்கிணைப்பு உதவியுடன், கொள்கை உரையாடல் ஒன்றை மார்ச் மாதம் 6 ஆம் திகதி 2024 அன்று புத்தளத்தில நடாத்தியிருந்தது. பலதரப்பட்ட பங்குதாரர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த நடவடிக்கைக்கான அழைப்பு ஆவணம் தொகுக்கப்பட்டுள்ளது. இதில் 50 சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், நன்னடத்தை உத்தியோகத்தர்கள், சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்ட உத்தியோகத்தர்கள், ஆலோசகர்கள் மற்றும் புத்தளம் மாவட்டத்திலுள்ள திருமணப் பதிவாளர்கள் உட்பட அரச உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.**

**சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம், மேற்கூறிய பங்குதாரர்களுடன் சேர்ந்து, பின்வரும் விடயங்களைத் தெரிவிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைக்கிறது;**

**சேவைகளை அணுகுவதில் காணப்படும் மொழி ரீதியான தடைகள்**

- அனைத்து சேவை நிறுவனங்களிலும் பன்மொழி ஆதரவு அமைப்புகளை செயற்படுத்துவதன் மூலம், பொது சேவைகளை அணுகுவதில் குறிப்பாக பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையில் (SGBV) பாதிக்கப்பட்டவர்களுக்கான மொழி அணுகலை உறுதி செய்தல்.

- பொலிஸ் புகார்கள் மற்றும் அதிகாரப்பூர்வ பதிவுகளை பல மொழிகளில் ஆவணப்படுத்துவதற்கு, குறிப்பாக புகார் அளிக்கப்பட்ட மொழியில் வினைத்திறனான முறையில் தகவல் மற்றும் தொடர்பு சம்பவங்களை ஆவணப்படுத்த பரிந்துரை செய்தல்.

- மொழித் தடைகளைத் தீர்ப்பதற்கும், அவர்கள் பேசும் மொழியைப் பொருட்படுத்தாமல் அனைத்து சமூக உறுப்பினர்களையும் உள்ளடக்கியவாறு சேவைகளை வழங்குவதற்கும் பொதுச் சேவை பணியாளர்களுக்கு போதுமான வளங்கள் மற்றும் பயிற்சிகளை ஒதுக்கீடு செய்வதற்க்கான பிரச்சாரத்தை மேற்கொள்ளுதல்.

- பல்வேறு மொழிப் பின்னணியில் உள்ள நோயாளிகளுடன் வினைத்திறனான முறையில் தொடர்பாடலை மேற்கொள்வதற்காக சுகாதார வசதிகளில் மொழி சார்ந்த ஆதரவு வழிமுறைகளை நிறுவுவதற்கான அடித்தளத்தை உருவாக்க சுகாதார வசதிகளில் பன்மொழி ரீதியான அறிவுரைகள் வழங்குவதையும் பணியாளர்களுக்கு பயிற்சி வழங்குவதையும் உறுதி செய்தல்.

- மொழிக் கொள்கைகள் செயற்படுத்தப்படுவதைக் கண்காணித்து, மேம்பாட்டிற்கான இடைவெளிகள் மற்றும் பகுதிகளைக் கண்டறிதல். மேலும் மொழித் தடைகளைத்

தீர்ப்பதற்கும், அனைவரும் சமமான முறையில் சேவைகளை அணுகுவதை உறுதி செய்வதற்கும் தொடர்ச்சியான முயற்சிகளை பரிந்துரைத்தல்.

- மொழியின் அடிப்படையிலான பாகுபாடு அல்லது விலக்குமுறைகளுக்கு எதிரான சட்ட நடவடிக்கை உட்பட, பொதுச் சேவைகளை அணுகுவதில் நியாயமான நடைமுறைகளைக் கோருவதற்கும், மொழி அணுகலுக்கான தங்கள் உரிமைகளை வலியுறுத்துவதற்கும் சமுதாயத்தை வலுப்படுத்துதல்.

**பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு வழிவகுக்கும் குடும்பம் மற்றும் சமூக-கலாச்சார இயக்கக்காரணிகள்**

- குறிப்பாக தந்தைகள் தங்கள் மகள்களுக்கு எதிராக இழைக்கும் துஷ்பிரயோகங்களை முன்கூட்டியே தலையிட்டு கண்டறிதல் என்பவற்றுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் மாவட்டத்திற்குள் சிறுவர் துஸ்பிரயோகம் மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளை எதிர்த்துப் போராடுவதற்கான முயற்சிகளை அதிகரித்தல் அத்தோடு கலாச்சார தடைகள் மற்றும் களங்கங்கள் இருந்தபோதிலும், பாதிக்கப்பட்டு-தப்பிப்பிழைத்தவர்கள் அத்தகைய துஷ்பிரயோகத்தைப் புகாரளிக்க தமக்கு அதிகாரம் மற்றும் தகுதி இருப்பதாக உணருவதை உறுதி செய்தல்.

- ஆண் குடும்ப உறுப்பினர்கள் இல்லாததால் அதிகரித்துவரும் பெண்கள் தொடர்பான பாதிப்புக்களை நிவர்த்தி செய்தல் மற்றும் வேரூன்றிய கலாச்சார விதிமுறைகள் மற்றும் நடைமுறைகளில் இருந்து உருவாகும் பாகுபாடுகளை எதிர்த்துப் போராடுதல்.

- தெரிவுசெய்யப்பட்ட இனப்பெருக்க சுகாதார கல்வி மற்றும் ஆதரவு நிகழ்சித்திட்டங்களை செயற்படுத்துவதன் மூலம், குறிப்பாக கற்பிட்டி போன்ற அதிக ஆபத்துள்ள பகுதிகளிலுள்ள குழந்தை கர்ப்பங்களின் பரவலை தெரியப்படுத்துதல்.

- ஆதரவுச் சேவைகளில் பங்கேற்பதில் உள்ள தடைகளை நிவர்த்தி செய்ய, அவுட்ரீச் (Outreach) திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம், உள்ளக மோதல்களைத் தீர்ப்பதில் ஆண்களை சிறப்பாக ஈடுபடுத்தும் இலக்கு நடவடிக்கைகளை எடுத்தல்

- பாதுகாப்பான நிகழ்நிலை இடங்கள் மற்றும் டிஜிட்டல் கல்வியறிவு வளங்களை ஊக்குவிப்பதன் மூலம் பாதிக்கப்படக்கூடிய சமூகங்கள், குறிப்பாக பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மீது காணப்படும் இரட்டைத் தாக்கத்தை கண்டறிந்து தடுக்கும் அதே வேளையில், பாதிக்கப்படக்கூடிய பெண்களுக்கு ஆதரவளிப்பதற்கான ஒரு கருவியாக சமூக ஊடகங்களின் திறனைப் பயன்படுத்துதல்.

- பாதிக்கப்பட்டு -உயிர் பிழைத்தவர்கள் சட்ட அமுலாக்க முகவர்களிடமிருந்து உதவியைப் பெறவும் சட்ட உதவியை அணுகவும் மேம்படுத்தப்பட்ட அறிக்கையிடல் வழிமுறைகள் மற்றும் ஆதரவு சேவைகளை வழங்குதல்.

- சிறப்பு ஆதரவு சேவைகளை செயல்படுத்துதல் மற்றும் வன்முறை மற்றும் துஷ்பிரயோகம் ஆகியவற்றால் பாதிக்கப்படுவது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்றவற்றின் மூலம் விசேடதேவையுள்ள பெண்களின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளித்தல்.

- இலக்குசார்தலையீடு மற்றும் தடுப்பு உத்திகளை செயல்படுத்துவதன் மூலம், கடந்த ஆண்டு பதிவாகிய கொலைகள், குடும்ப வன்முறை சம்பவங்கள் மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோக வழக்குகள் உள்ளிட்ட புள்ளிவிவரங்கள் மூலம் பெண்களுக்கு எதிராக நடைபெறும் ஆபத்தான வன்முறைகளின் விகிதத்தை நிரூபித்தல்.

- மாவட்டத்திற்குள் அதிகரித்துவரும் போதைப்பொருள் துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் நிகழ்வுகள் ஆகியவற்றுக்கு இடையே உள்ள இடைத்தொடர்பை குறிப்பிடுதல்.

**பொருளாதார சவால்கள்**

- பொருளாதார நெருக்கடியின் விளைவால் இளவயது திருமணத்தை நாடாமல் உயர்கல்வி அபிலாஷைகளைத் தொடர அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதன் மூலம் பெண்கள் உயர்கல்வி பெறுவதற்கு முட்டுக்கட்டையாக உள்ள தடைகளை நிவர்த்தி செய்ய உடனடி நடவடிக்கைகளை எடுத்தல்.

- கிராமப்புற பெண்களுக்கு எதிராக சிறுகடன் நிறுவனங்களால் நடாத்தப்படும் துஷ்பிரயோகத்தை எதிர்த்துப் போராடுவதற்கான நடவடிக்கைகளுக்கு வழிவகுத்தல்.

- பெண்கள் வேலைத்தளங்களில் அனுபவிக்கும் துஷ்பிரயோகங்களை, குற்றவாளியின் சமூக நிலை அல்லது தொடர்பைப் பொருட்படுத்தாமல், அத்தகைய சம்பவங்களைப் புகாரளிப்பதற்கும் வெளிப்படுத்துவதற்குமான வழிமுறைகளை வழங்குதல்.
- கிராமப்புறப் பெண்கள் மத்தியில் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்கள் மற்றும் நிதி சார்ந்து தங்கியிருத்தல் ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பை அடையாளம் கண்டு கொள்ளுதல்.
- பொருளாதார நெருக்கடி மற்றும் கோவிட்-19 தொற்றுநோயால் ஏற்படும் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களின் அதிகரிப்பை வெளிப்படுத்த ஆதரவு வழங்கி, கூடுதலான வளங்களையும் ஒதுக்குதல்.

**பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையினை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் மற்றும் ஆதாரங்களின் பற்றாக்குறை**

- பாலின அடிப்படையிலான வன்முறை(SGBV) வழக்குகளை கையாள தகுதியான அரசு அதிகாரிகள் பற்றாக்குறையை தீர்த்து, போதுமான வளங்களின் தேவையை நிறைவு செய்தல் மற்றும் அரசு அதிகாரிகளின் பங்கு மற்றும் பொறுப்புகளை மேம்படுத்துதல்.

- கிராமப்புறங்களில் ஏற்படும் இணைய பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை (CSGBV) தொடர்பான புகார்களை அளித்தல் மற்றும் கையாளும் வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, விசாரணைகளை பரவலாக்குதல் மற்றும் பிராந்திய சைபர் குற்றப்பிரிவுகளுக்கு ஆதாரங்களை வழங்குதல்.

- நீண்ட காலமாக செயலிழந்திருந்த உள்ளூர் மட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை வலையமைப்பை மீண்டும் செயல்படுத்துதல். மற்றும் இலங்கை முழுவதிலுமுள்ள பள்ளிகளில் முழுமையான பாலியல் கல்வியை (CSE) அறிமுகப்படுத்தி, பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியத்தைப் பற்றி முழுமையான கல்வியை வழங்குவதை உறுதிசெய்தல்.

- இணைய பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (CSGBV) பற்றிய புகார்களைப் பெறுவதற்கும் விசாரணை செய்வதற்கும் பயனுள்ள பகிர்ந்தளிக்கப்பட்ட பொறிமுறையை நிறுவுதல்.

- பங்குதாரர்களுடனான தொடர்பை வலுப்படுத்துதல் மற்றும் உள்ளூர் அரசாங்க அதிகாரிகள் போன்ற தொடர்புடைய அதிகாரிகளுக்கு அவர்களை வழிநடாத்துதல் மூலம் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை தொடர்பான சிக்கல்களுக்கு ஒரு பரிந்துரை புள்ளியாக பணியாற்றுதல்.

- அநீதியை எதிர்கொள்ளும் போது சட்ட உதவியைப் பெறுவதற்காக, பெண்களுக்குத் தெரிவிக்கவும் அதிகாரம் அளிக்கவும் உள்ளூர் பெண்கள் அமைப்புகளை ஊக்குவித்தல்.

- ஒவ்வொரு காவல் நிலையத்திலும் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகளை கையாளுவதில் நிபுணத்துவம் பெற்ற, பல்வேறு சமூகங்களுடன், குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளுடன், திறம்பட தொடர்பு கொள்ளக்கூடிய அனைத்து தேசிய மொழிகளிலும் தேர்ச்சியுள்ள, அர்ப்பணிப்புள்ள அதிகாரிகளை நியமிக்க வலியுறுத்துதல்.

- அரசாங்க அதிகாரிகளிடையே பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய விழிப்புணர்வை அதிகரித்து, SGBV பிரச்சினைகளை திறம்பட கையாளவும், பதிலளிக்கவும் அவர்கள் நன்றாகத் தயாராக இருப்பதை உறுதி செய்தல்.

- சட்ட உதவிகள் ஆணைக்குழு, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் (ICRC), கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் போன்ற தற்போதைய அமைப்புகள் மற்றும் பங்குதாரர்களுக்கு அதிகாரமளித்தல் மூலம், அல்லது புதிய பங்குதாரர்கள் மற்றும் அமைப்புகளை நிறுவுதல் மூலம், பெண்களுக்கான பாதுகாப்பு வீடுகள் மற்றும் பிற வசதிகளை விரிவுபடுத்துதல்.

**பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை மற்றும் அதை எதிர்த்துப் போராடுவதற்கான வழிமுறைகள் பற்றிய விழிப்புணர்வு இல்லாமை:**

- பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிராக தங்களைத் தாங்களே சிறப்பாகப் பாதுகாத்துக் கொள்வதற்கான சட்டப்பூர்வ உரிமைகள் மற்றும் பாதுகாப்புகள் பற்றி பாதிக்கப்பட்ட பெண்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- சட்ட உதவிகள் ஆணைக்குழு மூலம் கிடைக்கும் சட்டப் பரிகாரங்கள் குறித்த விழிப்புணர்வை மேம்படுத்தி, சட்ட உதவி வழங்கும் சேவைகளைப் பற்றி பெண்களுக்குத் தெரிவிக்க பங்குதாரர்களை ஊக்குவித்தல். அத்துடன் சட்ட உதவி ஆணைக்குழுவுக்குள் சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை எளிதாக்குதல்.
- தேசிய மற்றும் சர்வதேச சந்தைப்படுத்தல் நுட்பங்களில் கவனம் செலுத்தி, கூட்டுறவு சங்கங்கள் மூலம் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையால் பாதிக்கப்பட்டப் பெண்களுக்கு தொழில் முனைவோர் திறன் பயிற்சியை வழங்குதல்.
- சமூக கலந்துரையாடல்கள் மற்றும் உதவித் திட்ட நிகழ்ச்சிகள் மூலம் பெண்களுக்கு எதிராக நடாத்தப்படும் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களைத் தடுக்க நிதிச் சிக்கல்களை எதிர்கொள்ளும் ஆண்களுக்கு ஆதரவளித்தல்.
- பெண்கள் மற்றும் மகளிர் சமூகங்கள் தங்களைத் தாங்களே அணிதிரட்டி ஒழுங்கமைத்து, கிடைக்கக்கூடிய ஆதரவு சேவைகளைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.
- புத்தளம் மாவட்டத்தில் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையால் பாதிக்கப்பட்டுத்-தப்பிப்பிழைத்தவர்களுக்கான பாதுகாப்பான நிரந்தர வீடுகளை அமைப்பதில் அரசாங்க முதலீட்டை அதிகரிக்க வேண்டும் என்று பரிந்துரை செய்தல்.
- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை தொடர்பாக கவனம் செலுத்த, அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களுக்கு ஒரு ஒருங்கிணைந்த தளத்தை உருவாக்குதல்.
- சுயஉதவி குழுக்களின் மூலம் பெண்களின் பொருளாதார வலுவூட்டலை ஊக்குவித்தல் மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களை பொது அதிகாரிகளிடம் தெரிவிக்க பெண்கள் தயங்குவதால் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை சம்பவங்களைப் புகாரளிப்பதற்கும் உதவிகளை அணுகுவதற்கும் மாற்று வழிகளை வழங்குதல்.